# காங்கிரஸ் அரசின் தொடர்ச்சியாக பாஜக பட்ஜெட்

## கல்லூரியில் நடைபெற்ற விவாதத்தில் டி.கே.ரங்கராஜன் பேச்சு

தாம்பரம், மார்ச் 18: காங்கிரஸ் அரசின் நிதிநிலை அறிக்கையின் தொடர்ச்சியாக மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி அண்மையில் சமர்ப்பித்த இடைக்கால நிதி அறிக்கையும் உள்ளது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் கூறினார்.

மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை குறித்த விவாதம், மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் டி.கே.ரங்கராஜன் மேலும் பேசியது:

முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எங்கு விட்டுச் சென்றாரோ, அதை இன்றைய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தொடர்ந்துள்ளார்.

உலகெங்கும் பல நாடுகளில் 2008-ஆம் ஆண்டு தொடங்கிய பொருளாதாரச் சரிவு இன்னும் சீரமைக்கப்படவில்லை. ஐரோப்பிய பொருளாதாரம் கடும் நெருக்கடியில் உள்ளது. சீனா உள்ளிட்ட பல வேறு நாடுகளின் பொருளாதாரம் கீழே சரிந்து கொண்டிருக்கிறது.




விவாத அரங்கில் பேசிய மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன். உடன் (இடமிருந்து) கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயகுமார், நடேசன் வித்யாசாலா பள்ளி தாளாளர் என்.இராமசுப்பிரமணியன், அமெரிக்கை நாராயணன், பத்திரிகையாளர் சோம.வள்ளியப்பன், துறைத் தலைவர் கே.மாறன்.

இந்திய ஏற்றுமதி சுருங்கி, இறக்குமதி அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வேலைவாய்ப்புகளை அதிகரிக்க நடவடிக்கை இல்லை. தொழில் நுட்பத் திறன்களை மேம்படுத்த ஒதுக்கப்பட்ட நிதியில் மூன்றில் ஒரு பங்கு கூட செலவழிக்கப்படவில்லை. விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக 120 மாவட்டங்களில் வறட்சி நிலவுகிறது. எதிர்பார்த்த மகசூல் இல்லாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் அவல நிலை உள்ளது. தற்போதுள்ள 2 சதவீத விவசாயப் பொருளாதாரம், 14 சதவீதமாக உயர்த்தப்பட்டால்தான் 2022-ஆம் ஆண்டாவது பொருளாதார இலக்கை நாம் எட்ட முடியும் என்று முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளில் 1.96 கோடி பேர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தும் அவலம் அதிகரித்து வருகிறது. சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை, அதை தனியாருக்குத் தாரை வார்த்து தனது பொறுப்பை அரசு சுருக்கிக் கொண்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் அமெரிக்கை நாராயணன் பேசியதாவது:

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விலை உத்தரவாதம் வழங்கவேண்டும். நெல், கரும்புக்கு கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க முன் வரும் மாநில அரசுகளை மத்திய அரசு தடுக்கக் கூடாது என்றார்.

பத்திரிகையாளர் சோம.வள்ளியப்பன், நடேசன் வித்யாசாலா பள்ளியின் தாளாளரும், பொருளாதார ஆலோசகருமான என்.ராமசுப்ரமணியன், கல்லூரியின் வணிக மேலாண்மைத் துறைத் தலைவர் கே.மாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமணி - 19.3.16.

DINAMANI 19.3.16